நியூ கேம்பிறிட்ஜ்
டியூடோறியல்இன்ஸ்ரிரியூட்
திருநெல்வேலி சந்தி
10-1-80 முதல்
1. Radio & Electronic with Practical
2. Advanced & Spoken English
3. சுருக்கெழுத்து, தட்டச்சு (ஆங்கிலம்)
4. I. B. K., I. A. A.
விபரங்கட்கு:
V. M. பாக்கியநாதன்

பக்கங்கள் 8

# ஈழநாடு The EELANAADU

50 சதம்

மலர் 21 மார்கழி 25 ஸபர் 20 இதழ் 331
யாழ்ப்பாணம் புதன்கிழமை 9-1-80

புதிய வகுப்புகள்
G. C. E. A/L O/L
1980 / 81 ஆகஸ்ட், டிசம்பர்
ஆரம்பம் 18-1-80
லோகநாதன்
இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



# சரண் ராஜினமா!

# இந்திரா வெள்ளியன்று பதவி ஏற்பார்!

(புதுடில்லி)

**வெற்றிமேல் வெற்றிபெற்று, மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்கப்போகும் திருமதி இந்திராகாந்தி, அநேகமாக நாளை மறுதினம் புதிய பிரதமராகப் பதவி ஏற்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

**அதேநேரத்தில், படுமோசமானதோல்வியை ஏற்றுக்கொண்ட காபந்துப்பிரதமர் திரு. சரண்சிங், தமது அரசின் ராஜினமாக் கடிதத்தை நேற்று இந்திய ஜனதிபதி திரு. நீலம் சஞ்சிவரெட்டியிடம் சமர்ப்பித்துள்ளார்.**

இந்திராகாங்கிரஸின் பாராளுமன்றக் குழு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இங்கு கூடி, புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும். புதிய தலைவராக தெரிவுசெய்யப்படவிருக்கும் திருமதி இந்திராகாந்தி, அநேகமாக நாளை மறுதினம் பிரதமராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சிறிமா வாழ்த்து

இந்திரா காந்திக்கு கிடைத்

(8ம் பக்கம் பார்க்க)

## இந்திரராசா மரணம்: கொலைஎன்றுதீர்ப்பு!

# பொலிஸ் இன்ஸ்பெக்டரை கைதுசெய்யுமாறு உத்தரவு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ரிமாண்டிலிருந்தபோது மரணமான ஐயாத்துரை இந்திரராசாவின் மரணம் கொலையென மரண விசாரணை நடத்திய யாழ் நீதவான் திரு. எஸ். இராஜசிங்கம் தீர்ப்பளித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகநபரான சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் கருணரத்தினவைக் கைதுசெய்யுமாறு நீதிவான் நேற்று வாரண்ட் பிறப்பித்தார்.

யாழ் நீதிமன்றத்தில் நீதவான் திரு. எஸ். இராஜசிங்கம் முன்னிலையில் நடந்த மரணவிசாரணை நேற்று முடிவுற்றது. நேற்று மாலை 5-30 மணிக்கு நீதவான் தீர்ப்பளித்தார்.

வைத்திய அதிகாரியின் அறிக்கையின்படி கடுங்காயங்களினுல் ஏற்பட்ட அதிர்ச்சியினுல் மரணம் நிகழ்ந்துள்ளதென்றும், பொலிஸாரின் தாக்குதல் இடம்பெற்றுள்ளதென்பதற்கு சாட்சியம் இருப்பதாகவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தீர்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து இறந்தவர் நலன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். நடராசா தீர்ப்பின் பிரகாரம் இது ஒரு கொலை என்றும் கொலை சந்தேகநபர்களின் ஒருவரான இன்ஸ்பெக்டர் கருணரத்தினவின் பெயர் விசாரணையின்போது சாட்சியம்மூலம் துலக்மாக தெரிவிக்கப்பட்டிருப்பதால், அவரை கைதுசெய்ய பிடி ஆணை பிறப்பிக்குமாறும்

(5ம் பக்கம் பார்க்க)

(புதுடில்லி)

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற தேர்தல் முடிவுகள் வருமாறு:


## வெளியான முடிவுகள்:477

| | |
|---|---|
| இந்திராகாங்கிரஸ் | 334 |
| ஜனதா | 28 |
| தி. மு. க. | 16 |
| லோக்தள் | 39 |
| அர்ஸ் காங்கிரஸ் | 10 |
| இடது கம்யூனிஸ்ட் | 21 |
| வலதுகம்யூனிஸ்ட் | 09 |
| அ. இ. அ. தி. மு. க. | 02 |
| முஸ்லிம் லீக் | 03 |
| இதர கட்சிகள் | 13 |
| சுயேச்சை | 02 |
| இதுவரை வெளியான மொத்த முடிவுகள் | 477 |

வெளிநாட்டு சூத்திர முறைகளினுல் ............... தயாரிக்கப்பட்டவை
றொபின் சோப்வகைகள்




வெண்மைக்கு வெண்மை தருபவை




தயாரிப்பாளர்:
பெனின்சுலா சவர்க்கார தொழிலகம்
9.கண்டி வீதி. நாவற்குழி.

## இந்திராவுக்கு 'அமிர்' வாழ்த்து

(கொழும்பு)

இந்திய இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி அமோகவெற்றிபெற்றதைப் பாராட்டி அதன் தலைவி திருமதி இந்திரா காந்திக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

"நீங்கள் இந்தியாவில் உறுதியான ஆட்சியமைக்க தமிழ் இனத்தின் சார்பிலும் எதிர்க்கட்சி சார்பிலும் எனது நல்லாசிகள்" என்று அத்தந்திச் செய்தியில் திரு. அமிர்தலிங்கம் எழுதியுள்ளார். தி. மு. க. தலைவர் திரு. கருணாநிதிக்கும் அவர் பாராட்டுத் தந்தி ஒன்றை அனுப்பினார். (ம-கு)

# எம்.ஜி.ஆர்.பதவி விலகவேண்டும்!"

(சென்னை)

"மக்களின் தீர்ப்புக்கு தலை வணங்கி, தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பதவி விலகவேண்டும்" என்று இந்திரா காங்கிரஸின் தமிழ்நாடு தலைவர் திரு. எம். இளையபெருமாள் நேற்றுத் தெரிவித்தார்.

நிருபர்கள் மத்தியில் நேற்று அவர் கருத்துவெளியிடுகையில் "அ. இ. அ. தி. மு. கழகத்தை இத்தேர்தலில் தமிழக மக்கள் ஒதுக்கிவிட்டார்கள். இத்தீர்ப்புக்கு முதலமைச்சர் மதிப்பளிக்கவேண்டும். அதற்காக நான் பதவி விலகும்படி கூறவில்லை. வரப்போகும் மாநகராட்சி, நகராட்சி மன்றத் தேர்தல்களிலும் தி. மு. க- இந்திரா காங்கிரஸ் கூட்டு நீடிக்கும்" என்றும் திரு. இளைய பெருமாள் கூறினர்.

## தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தோர்:

# நினைவு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாடு அசம்பாவிதத்தின்போது பலியானவர்களுக்கு யாழ். முற்றவெளி

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் பருத்தித்துறை வீதி, பலாலி வீதிச்சந்தியில், பருத்தித்துறை வீதி முகப்பில் கிணற்றுடன் இரண்டரைப் பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு, பரப்பு 65 ஆயிரம் ரூபாவுக்கு மேல், தொடர்பு: தர்மபாலன், சீவம், நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7423. (4606)

திருநெல்வேலி இராசா வீதிக்கருகாமையில் இரண்டு பரப்புக்காணி புதியவீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: S நாகராசா, இராசா வீதி, திருநெல்வேலி (கிறேசருக்கு எதிர்க்கடை). 4583

### கல்வி

ஜீ. சி. ஈ. (உயர்தரம்) இரசாயனம், ஜீ. சி. ஈ. (சாதாரணம்) விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் வீடுகளுக்குச் சென்று கற்றுக்கொடுக்கப்படும், கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 4598, C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 4598

### தேவை

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் பிரதான வீதிகளுக்கு அருகாமையிலுள்ள குடியிருப்புக் காணி நல்ல வீட்டுடன் அல்லது வீடு இல்லாமலும் தேவை. உடன் பணம் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். இல. 2, மல்லிகா லேன், வெள்ளவத்தை, கொழும்பு-6 4607

எமது ஸ்தாபனத்திற்குச் சோடா பெட்டிகள் ஏற்றி இறக்கக்கூடிய கூலியாட்களும் சோடாப் பெட்டி ஏற்றி இறக்கக்கூடிய வியாபாரிகளும் தேவை. நேரில் வரவும். பிள்ளையார் ஸ்ரோர்ஸ். 31 மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம். 4601

மில்லில் வேலை செய்பவர்கள், அப்பளம் தயாரிப்பவர்கள், சைக்கிளில் வியாபாரம் செய்பவர்கள், லைக்கற் ஒட்டக்கூடிய பெண்பிள்ளைகள் தேவை. தேவாஸ் கிறைண்டிங் மில், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4596

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீனமுறையில் வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor) Building Technology, PMG Certificate பயிற்சிகள் 16-1-80 ஆரம்பமாகின்றன. National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். இலவச கையேட்டிற்கு எழுதவும். 4597

காங்கேசன் தொகுதி

## வி. சே. நிலையம் மீண்டும் கீரிமலையில்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைத் தொகுதி விவசாய சேவை நிலையம் அளவெட்டியிலிருந்து கீரிமலைக்கு மீண்டும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையம் ஏற்கனவே கீரிமலையில் இயங்கி வந்தபோதும் பின்னர் புதிய பொலிஸ் பிரிவுக்காக இந் நிலையத்தின் கட்டிடம் சுவீகரிக்கப் பட்டதால் இந்நிலையம் அளவெட்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது.

ஆனால் பொலிஸ் பிரிவு தற்போது மூடப்பட்டதையடுத்து மீண்டும் இம்மாதம் தொடக்கம் விவசாய சேவை நிலையம் கீரிமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (அ)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

மொரட்டுவவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 758 வது தேசிய சுவீப முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**15 G 0625**
ரூ. 1,00,000

இரண்டாம் பரிசு
**33 D 0629**
ரூ. 40,000

மூன்றும் பரிசு
**15 D 0615**
ரூ. 10,000

தலா ரூபா 1886-37 சதம் ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுக்கள் வருமாறு:

| | |
|---|---|
| 32 A 0578 | 17 A 0709 |
| 18 A 0202 | 01 A 0742 |
| 02 A 0023 | 13 B 0598 |
| 02 B 0930 | 35 B 0081 |
| 35 B 0208 | 23 B 0557 |
| 22 C 0564 | 08 D 0930 |
| 24 D 0772 | 29 D 0231 |
| 02 D 0082 | |
| 19 E 0370 | 27 E 0646 |
| 26 F 0338 | 14 F 0038 |
| 30 F 0794 | 16 F 0981 |
| 03 F 0155 | 20 F 0613 |
| 22 F 0301 | 07 F 0629 |
| 02 G 0589 | 18 G 0150 |
| 03 G 0654 | 29 G 0566 |

| | |
|---|---|
| 34 G 0206 | 30 G 0507 |
| 28 G 0414 | 25 G 0203 |
| 24 G 0518 | 29 H 0097 |
| 21 H 0782 | 29 J 0039 |
| 09 J 0201 | 18 J 0992 |
| 21 J 0662 | 22 J 0247 |
| 09 J 0286 | 04 K 0650 |
| 28 K 0677 | 06 K 0777 |
| 27 K 0953 | 30 L 0107 |
| 34 L 0415 | 27 L 0752 |
| 01 L 0908 | 24 M 0408 |
| 02 M 0945 | 34 M 0333 |
| 04 M 0306 | 32 M 0447 |
| 28 N 0697 | 01 N 0223 |
| 24 N 0776 | 02 N 0501 |
| 22 O 0721 | 25 O 0889 |
| 18 O 0287 | 12 O 0100 |
| 05 O 0890 | 16 P 0624 |
| 05 Q 0892 | 02 Q 0852 |
| 07 Q 0208 | 03 Q 0596 |
| 01 R 0002 | 10 R 0811 |
| 17 R 0566 | 24 R 0513 |
| 03 R 0571 | 14 S 0766 |
| 23 S 0618 | 29 S 0423 |
| 17 S 0869 | 34 T 0829 |
| 29 T 0081 | 17 T 0689 |
| 16 T 0352 | 04 T 0132 |
| 12 U 0280 | 09 U 0107 |
| 09 U 0349 | 20 V 0260 |
| 14 V 0248 | 13 V 0730 |
| 11 W 0137 | 19 X 0429 |
| 23 X 0309 | 15 X 0596 |
| 06 Y 0074 | 04 Y 0959 |
| 10 Y 0473 | 09 Z 0829 |
| 01 Z 0222 | 08 Z 0556 |
| 02 Z 0754 | |

(இவை யாவும் உறுதுப்படுத்தப்படவேண்டும்)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 12100

1. சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளையும் பெண் அன்னரபூரணமும்
கச்சேரி, நல்லூர் ரோட், யாழ்ப்பாணம்.

வழக்காளிகள்

எதிராக

1. செல்லையா பொன்னுத்துரை
2. பெண் இராசம்மா இருவரும்
பாரதி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
3. சின்னத்தம்பி வீரசிங்கமும்
4. பெண் சேதுலச்சுமியும் இருவரும்
மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

எதிரிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B 12100-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1980-ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 3,728/- பின் 10-11-72 தொடக்கம் 10-5-73 வரைக்கும் ரூபா 2500/-க்கு 10% வட்டியும் பின் முழுத் தொகையும் இறுபடும் வரைக்கும் 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 530 சதம் 30. இதில் ரூபா 4100/-உம் செலவு தொகையால் 450/-கொடுக்கப்பட்டது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக்சண்டிக்குளிகோவிற்பற்று சிவியாதெரு இறை நித்தன்தோட்டம் பர, நில. இலாச்சம் 2. இதில் தெற்குப் பக்கமாக பர. நில. இலாச்சம் 1ம் வீடும் வடகிழக்கில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் வான்பயிர் செய்பயிர்களும் இந்த பரப்பு நில லாச்சம் ஒன்றுக்கு எல்லை கிழக்கு பரஞ்சோதி பெண் கமலாம்பிகைக்குரிய ஆதனம், வடக்கு எதிரிகளுக்குரிய மீதி ஆதனம், மேற்கு ஒழுங்கையும், முத்தையா மயில்வாகனத்துக்குரிய ஆதனம், தெற்கு சி. எஸ். அருளம்பலத்துக்குரிய ஆதனம் இது அடங்கலும்,

சி. செ. மாரிமுத்து,
நீதிமன்றங்களின் விற்பனவு
ஆணையாளரும் விலைமதிப்பாளரும்,

''விதானை வளவு'',
சித்தன்கேணி,
30-11-79.

4600

## ஹோட்டல் தொழில் பயிற்சி

வளர்ந்து வரும் ஹோட்டல் துறையில் நாட்டமுள்ள
18க்கும் 25வயதுக்குமிடைப்பட்ட இளைஞர்களுக்கு
ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில்
பயிற்சி அளிக்கப்படும்.
ஆங்கில அறிவு அவசியம்.

- ஸ்ருவர்டுகள்
- பரிசாரகர்கள்
- அறைப் பையன்கள்

ஆகிய பயிற்சிகள்
சென்னையில் அளிக்கப்படும்.

தொடர்பு:

எஸ். பத்மநாதன் ஜே. பி.
117/1, 4-ம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.

கிளை:

எஸ். பத்மநாதன் ஜே. பி.
48, (144) மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

4601


# 1978ல் 37,170 லட்சம் ரூபா வெளிநாட்டு உதவி

(நேற்றைய தொடர்ச்சி)

பொதுப்படுகடன் என்பது இலங்கை அரசால் அதன் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகளுக்கு நிதியிடுவதற்காக வெளிநாட்டு, உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட தொகையாகும். 1978 டிசெம்பரில் அரசின் மொத்தப் பொதுப்படுகடன் ரூ. 309,500 லட்சமாக விளங்கி, கடந்த ஆண்டின் 42 சத வீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 24 சத வீதம் கொண்டதொரு அதிகரிப்பைக்காட்டியது. பெறுமதியின் நியதியில், மொத்தப் பொதுப்படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 59,640 லட்சமாக விளங்கியது. மொத்தப் பொதுப்படுகடனில் உள்நாட்டுப்படுகடன் ரூ. 163,680 லட்சமாக விளங்கிய வேளையில் வெளிநாட்டுப்படுகடன் ரூ. 14,5820 லட்சமாக விளங்கியது.

(பக்கம் 215)

செயற்றிட்ட, செயற்றிட்ட மல்லா (பண்டக்) கடன்கள் ப. நா. நிதியத்தின் பொறுப்பாண்மை நிதியங்கள் ஆகியன உள்ளடங்கி 1978 இறுதியில் வெளிநின்ற மொத்தப்படுகடன் ரூ. 145,820 லட்சமாக விளங்கிமுன்னையஆண்டைவிட ரூ. 39,890 லட்சம் அல்லது 38 சத வீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியதுடன் செலாவணி வீதங்களின் தளம்பல் காரணமாக ஏற்பட்ட ரூ. 7,730 லட்சம் கொண்ட மேலதிக படுகடன் பொறுப்பினையும் கொண்டிருந்தது. (பக்கம் 231)

### 1978ம் வருடத்திய மத்தியவங்கியின் பொருளாதார மீளாய்வு

இவ்வாண்டுக் காலத்தில், செயற்றிட்ட செயற்றிட்ட மல்லா(பண்டக்)கடன்கள் வடிவில் இலங்கை அரசால் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டு உதவி ரூ. 37,170 லட்சமாகும். இது செயற்றிட்டக்கடன்கள் ரூ. 15,840 லட்சம் (43%) செயற்றிட்டமல்லாக்கடன்கள் (பண்ட) ரூ. 21, 330 லட்சம் (57%) ப. நா. நிதியத்தின் பொறுப்பாண்மை நிதியத்திலிருந்தான கடன் ரூ, 7,890 லட்சத்தையும் உள்ளடக்கியிருந்தது. அதேவேளையில் செயற்றிட்டக்கடன் வடிவில் பெறப்பட்ட ரூ. 15,840 லட்சம் கொண்ட தொகை முறையே ரூ. 6480 லட்சம் பல்புடை மூலங்களிலிருந்தும் ரூ 9, 360 லட்சம் இருபுடை மூலங்களிலிருந்தும் பெறப்பட்டவேளையில் பண்டக்கடன்கள் அனைத்தும் பன்னாட்டு நாணய நிதியத்தின் பொறுப்பாண்மை நிதியக்கடன் நீங்கலாக இருபுடை மூலங்களிலிந்து பெறப்பட்டன. வெளிநாட்டு உதவிகளின் வாயிலாகப் பெறப்பட்ட மொத்தப்பெறுகை 1978இன் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை ரூ. 8,970 லட்சத்தால் விஞ்சியது. 1978ஆம் ஆண்டுக்கு ஒப்பந்தஞ் செய்யப்பட்ட புதிய கடன்கள் ரூ. 48,920 லட்சமாக விளங்கின. அவற்றில் ரூ. 16,800 லட்சம் பல்புடை மூலங்களிலிருந்தும் மிகுதி ரூ. 32, 120 லட்சம் இருபுடை மூலங்களிலிருந்து பெறப்பட்டன.

(பக்கம் 231)

1978 இல் மீளச் செலுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் ரூபா 5,010 இட்சமாகும். இவைகள் பெரும்பாலும் மூலதன மீளச் செலுத்தல்களாகும். இம்மீளச் செலுத்தல்களில் ரூபா 1,540 இலட்சம் (31%) செயற்றிட்டக் கடன்களாகவும் ரூபா 3,470 இலட்சம் (69%) செயற்றிட்டமல்லா (பண்டக்) கடன்களாகவும் விளங்கின. இவ்வாண்டில் பெறப்பட்ட தேறிய பெறுகைகள் ரூபா 32,150 இலட்சமாக விளங்கின. (பக்கம் 231)

வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு விகிதம் (அதாவது தீர்ப்பனவு, [வணிகப்பொருள் ஏற்றுமதிகள், காரணியல் லாப்பணிகள் ஆகியவற்றின் சதவீதமாக விளங்கும் தீர்ப்பனவு செலுத்தல்கள் 1978இல் மேலும் திருந்தியமைந்துள்ளது. இது 1977 இன் 16சத வீதத்திலிருந்து ஆய்வுக்குட்பட்ட ஆண்டில் 15 சதவீதமாக வீழ்ச்சியுற்றுள்ளது. இத்தகைய திருந்திய செயலாற்றத்திற்கு பொருட்கள் பணிகள் கணக்குகள் மீது பெறப்பட்ட உயர்ந்தளவு வெளிநாட்டுச் செலவாணியே காரணமாகும். படுகடன் தீர்ப்பனவு செலுத்தல்கள் மொத்த அரசிறையில் 37 சத வீதத்திற்கு வகைகூறின. செயற்றிட்ட. செயற்றிட்ட மல்லா கடன்களைப் பொறுத்தவரையில் தீர்ப்பனவு செய்யப்பட்ட மொத்தப்படுகடன் 1978 இல் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடனில் 21 சதவீதத்திற்கு வகைகூறின. (பக்கம் 231) (நாளை தொடரும்)

......

## பாஷையூரில் புதிய தபால்பெட்டி

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் 7-ம் வட்டாரத்தில் கடற்கரை வீதியில் வைக்கப்பட்டிருந்த இரும்புத் தபால்பெட்டி பழுதடைந்து பலமாத காலமாக பொதுமக்கள் கடிதங்கள் போடமுடியாமல் இருந்ததினால் திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை கொழும்பு தபால் மா அதிபருடன் எடுத்துக் கொண்ட முயற்சியினால் புதியதோர் சீமெந்தினால் அமைக்கப்பட்ட தபால்கட்டை மேற் குறிப்பிட்ட இடத்தில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது விடயமாக திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை கொழும்பு தபால் அதிபருக்கும், யாழ். தபால் பகுதியினருக்கும் பாஷையூர் மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துள்ளார். (ஆ(

......

## திருப்பழுகாமத்திற்கு மின்சாரம்

(படடிருப்பு)

திருப்பழுகாமம் கிராமத்திற்கு விரைவில் மின்சாரம் விநியோகிக்கப்படும். இம்மின்சாரத் திட்டத்திற்கு ஏழு லட்சம் ரூபா செலவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் இப்மாதப் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்படும். பட்டிருப்பு எம். பி. திரு. பி. கணேசலிங்கம் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார். (வெ)

......

## சவான் வெற்றி

புதுடில்லி, ஜன. 8

காபந்து அரசின் துணைப் பிரதமரும் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவருமான திரு. வை. பி. சவான் 53,033 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளார்.

திரு. சவானுக்கு 2 லட்சத்து 23 ஆயிரத்து 213 வாக்குகளும் இவருக்கு அடுத்தபடியாகவந்த இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் திருமதி பட்டீலுக்கு 1,70,180 வாக்குகளும் கிடைத்தன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

''எண்ணற்ற நியாயங்கள் செய்யும் தகுதிபடைத்த நாடு அளவில்லாக் கீர்த்தியுடன் விளங்கும்.''
--அண்ணல் காந்தி.

## மக்கள் கருத்து

### சிவராத்திரி விடுமுறையை மறுநாள் தருக

கடந்த வருடங்களில் சிவராத்திரி தினத்தன்று பொது விடுமுறை வழங்கப்பட்டது போன்றுதான் இவ்வருட சிவராத்திரிக்கும் விடுமுறை வழங்கும் முடிவை மறு பரிசிலனை செய்ய வற்புறுத்துமாறு இந்து சமய ஸ்தாபனங்களுக்கு மட்டு நகர் இந்து மாணவ பேரவையினர் பகிரங்கவேண்டுகோள் விடுத்துள்ளனர். இதன் அவசியம்பற்றி பேரவையின் அமைப்பாளர் திரு. ம. வரதன் விளக்கம் தெரிவித்துள்ளார்.

''சிவராத்திரி தினத்தன்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் விடுமுறை வழங்கப்பட்டுவருகின்றது, இவ்விடுமுறையை அன்றையதினம் வழங்கப்படுவதால் எவ்வித பிரயோசனமும் இல்லை. அன்று இரவு நித்திரை விழிப்பதால் விடுமுறையை மறு நாள் வழங்குவதே பொருத்தமானது. இந்துசமய ஸ்தாபனங்கள் நீண்ட நாட்களாக அரசாங்கத்திடம் இது பற்றிக் கோரிக்கை விடுத்துவந்தன. ஆனால் அக்கோரிக்கைக்கு எந்த அரசாங்கமும் செவி சாய்க்கவில்லை.

இந்நிலையில் கடந்த வருடமும் இப்பிரச்னை தலைதூக்கியது. இந்து சமய ஸ்தாபனங்கள் இவ்விடுமுறை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை அரசுடன் நடத்தியது. அது போன்று நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகமும், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி மந்திரி திரு. சௌ. தொண்டமானும் கடந்த வருடம் சிவராத்திரி விடுமுறையை அன்றைய தினம் வழங்காமல் மறு நாள் வழங்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இப்பேச்சுவார்த்தையின் பிரகாரம் இவ்வருடம் சிவராத்திரி விடுமுறை ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் அன்றையதினமேவழங்கப்படும் எனவும் அடுத்த வருடம் முதல் சிவராத்திரிக்கு மறுநாள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இவ்வருட அரசாங்க விடுமுறைகளைப் பார்த்தால் அந்நிலையில் இல்லை. பெப்ரவரி மாதம் 14ம் திகதி வியாழக்கிழமை சிவராத்திரிதினம். அன்றையதினமே விடுமுறையாகவும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இவ்விஷய சம்பந்தமான முடிவை மறு பரிசிலனை செய்ய இந்து சமய ஸ்தாபனங்கள், பிராந்திய அபிவிருத்தி தமிழ் மொழி அமுலாக்கல், இந்துக் கலாச்சார அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை அரசுடன் தொடர்புகொண்டு இவ்வருடம் முதல் சிவராத்திரிக்கு மறுநாள் விடுமுறை வழங்கப்படவேண்டிய அவசியத்தை வற்புறுத்த வேண்டும்.''

தமிழினியவன்.
மட்டக்களப்பு.

......

### கரையில் ஒதுங்கிய பொருட்கள்

(மன்னார்)

தலைமன்னார் கடற்கரையோரம் சாரம், சாறி, மற்றும் இந்தியப் பொருட்கள் பல கரையொதுங்கின. கடல் தொழில் செய்வதற்குச் சென்ற மீனவர்கள் இவற்றை எடுத்துச் சென்றனர்.

# ஸ்திரமான ஆட்சிக்கும் சர்வதேச அந்தஸ்துக்கும் இந்திராகாந்தி

சீலன் கதிர்காமர்
(வரலாற்றுத்துறை விரிவுரையாளர்)
மு. திருநாவுக்கரசு
உதவி விரிவுரையாளர்

இந்திய அரசியல்வானில் இந்திராகாந்தியின் கொடி மீண்டும் பறக்கத்தொடங்கியுள்ளது. இந்திய மக்களின் நன்மதிப்பைப்பெற்ற நேரு குடும்பம் 1977 ஆம் ஆண்டுத் தேர்தல்மூலம் மிகமோசமாகத் தூக்கி எறியப்பட்டிருந்தது. அவ்வாறு தூக்கி எறியப்பட்ட இந்திராகாந்தி மிகஅமோக ஆதரவோடு ஆட்சிப்பீடத்தில் அமரஇருப்பது உலகரங்கிற் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தேர்தல் வெற்றி இந்திராவின் தனிப்பட்ட திறமைக்குக்கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாகும். நேரு குடும்பத்தின் இழந்த கௌரவத்தை மீண்டும் நிலைநிறுத்த இந்திராகாந்திக்கு இத்தேர்தல் வெற்றி ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் மக்களால் முழுமையாக நிராகரிக்கப்பட்ட இந்திராகாந்தியை மக்கள் மீண்டும் ஆட்சிபீடத்தில் ஏற்றுவதற்குப் பல காரணங்கள். இன்றைய சர்வதேசச் சூழ்நிலையில் இந்தியாவிற்கு ஒரு பலம் வாய்ந்த ஆட்சி அவசியப்படுகின்றது. அந்தப்பலம்வாய்ந்தஆட்சியை இந்திராகாந்தியால்தான் தற்போதைய சூழ்நிலையில்கொடுக்கமுடியுமென்பதை கடந்த மூன்றுண்டு கால ஸ்திரமின்மையை மனதிற்கொண்டு மக்கள் இம்முடிவிற்கு வந்துள்ளனரெனத் தோன்றுகின்றது.

கடந்த மூன்றுண்டு கால ஆட்சியின்போது...

- இந்தியாவின் சர்வதேச அந்தஸ்துக் குறைந்துள்ளது.
- ஓர் ஸ்திரமான வெளிநாட்டுக் கொள்கை இருக்கவில்லை.
- பொதுவில் இந்தியாவின் பலம் அதிகரிக்கவில்லை.
- உள்நாட்டிற் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து வந்தது.
- அரசியல்-நிர்வாகம் திறமையற்றதாயும் குழறுபடியாயும் அமைந்திருந்தது.
- வறுமை, வேலையின்மை, வாழ்க்கைச்செலவு என்பன அதிகரித்தன.
- ஆட்சிபுரிந்த ஜனதா அரசாங்கம் துண்டு துண்டாகப் பிளவுபட்டது.
- அபிவிருத்தி வேலைகளில் எந்தவித அக்கறையும் செலுத்தப்படாமல் அரசியல் இழுபறியிற்தான் கடந்த மூன்றுண்டு காலமும் விரையமாகியது.

இவற்றின் பின்னணியிற்தான் இந்திய மக்கள் தமது புதுவருடத் தீர்மானத்தை இத்தேர்தலில் அளித்திருக்கிறார்கள்.

## ஜனதா

ஜனதா ஓர் ஒட்டுப்போட்ட கட்சியாகவே 1977ல் ஆட்சிபீடமேறியது. ஜனதாஅரசாங்கத்திடம் ஒரு திட்டமான பொருளாதாரக் கொள்கை இருக்கவில்லை. நவீன உலகத்துடன் இணைந்த இந்தியாவின் தேவைகளை ஜனதா சிந்திக்கவில்லை. ஜனதா ஆட்சிபீடமேறிய காலத்திலிருந்து கவிழும்வரை செய்த ஒரேயொரு கைங்கரியம் அரசியற் பழிவாங்கலைக் கிரமமாகச் செய்துவந்தமைதான். அரசியற் திட்டுக்களோடும் பேச்சுக்களோடும் ஜனதாவின்காலம் கழிந்ததேதவிர வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் நிகழவில்லை. அரசியலைப்பேசுவதே ஓர் அநாகரிகமென்ற கருத்து சுற்றேர் மத்தியில் இக்காலத்தில் வளர்ச்சியடைந்து வந்தது. ஓர் அரசியல் வெறுப்பின் மத்தியில் தான் 1980ஆம் ஆண்டுத் தேர்தல் நிகழ்ந்தது. இந்தப் பின்னணியில்தான் மக்கள் ஒப்பீட்டு ரீதியாக இந்திராகாந்தியைத் தெரிவு செய்துள்ளார்கள். இந்திராகாந்தியின்மீது ஓர் தனிப்பட்ட பற்று இந்திய மக்கள் மத்தியில் வளர்ந்ததென்பதல்ல. வேறு வழியின்றித்தான். இந்திராகாந்தியைத் தெரிவுசெய்திருக்கிறார்கள்.

## இந்திரா

மக்களிடம் வாக்குக் கேட்பதற்கு எந்தக் காரணத்தையும் முன்வைக்க ஜனதாவால் முடியவில்லை. தேர்தற் பிரசாரத்தில் ஜனதாவால் முன்வைக்கக் கூடியதாக கொள்கையோ, அன்றிப் பிரச்னைகளோ எதுவுமிருக்கவில்லை, ஜனதா தான் சாதித்தவற்றைக்காட்டி வாக்குக் கேட்க முடியாது. ஏனெனில் அவர்கள் சாதித்தது எதுவுமில்லை. சீராக ஆட்சிசெய்ய முடியாமற்கவிழ்ந்த ஜனதாவை மக்கள் மீண்டும் ஏற்கத்தயாராகவில்லை. இத்தேர்தலின்போது இந்திராவிடம் முன்வைப்பதற்குச் சில கருத்துக்கள் இருந்தன.

ஃ சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவேன்.

ஃ உறுதியான ஆட்சியை ஏற்படுத்துவேன்.

ஃ உயர்ந்து சென்ற வாழ்க்கைச் செலவைக் குறைப்பேன்.

என்பனவாகும்.

கடந்த மூன்றுண்டுகாலமும் மேற்பட்ட அரசியற் குழப்பத்திற்கும் அரசியல் வெறுப்பிற்கும் மத்தியில் மக்கள் இந்திராகாந்தியிடம் பொறுப்பைத் தள்ளிவிட்டார்கள்.

1977ம் ஆண்டுப் படுதோல்வியின் பின்பும் இந்திரா காந்தி சளைக்காமல் பின்வாங்காமற் பிரச்னைகட்கெல்லாம் முகம் கொடுத்து வந்துள்ளார். இந்திரா காந்தியைப் பொறுத்தவரையில் இது இந்திரா காந்தியின் துணிச்சலுக்குக் கிடைத்த வெற்றியாகும். படுமோசமான தோல்வின் பின்புங்கூட இந்திராகாந்தி துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும் அரசியலில் நின்று பிடித்தமை வியக்கத்தக்கதுதான்.

## பாராளுமன்ற ஜனநாயகம்

இந்திய மக்கள் 1097 ஆம் ஆண்டுத் தேர்தலிலும், தற்போது நிகழ்ந்த தேர்தலிலும் தமது வாக்கைப் பயன்படுத்தும் முறையில் ஓர் அரசியல் உணர்வைக் காட்டியுள்ளனர். இந்தியா சுதந்திரமடைந்த காலம் தொட்டு 1977 ஆம் ஆண்டுவரையான 30 ஆண்டுகளாக ஒரேகட்சிதான் பாராளுமன்ற ஜனநாயக முறையின்கீழ் ஆட்சிபீடத்திலிருந்தது. தொடர்ச்சியாக ஒரே கட்சியே 30 ஆண்டுகாலமாக ஆட்சி செலுத்தியும் இந்தியாவின் மூலாதாரப் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. 77ஆம் ஆண்டு இந்திராவின் சர்வாதிகாரப் போக்கையெதிர்த்து மக்கள் இந்திராவை ஆட்சியிலிருந்து தூக்கி எறிந்தார்கள். இந்தக்கட்டத்தில் இந்தியாவின் பாராளுமன்ற ஜனநாயக முறை முதிர்ச்சியடைந்துவிட்டதெனப் பலர் கூறினார்கள். ஆனால் 30 ஆம் ஆண்டுத் தேர்தல் முடிவு இன்னொரு விடயத்தை தோற்றுவிக்கின்றது. அதாவது மக்கள் தமது பிரச்னைக்குச் சரியான தீர்வினைக்கண்டுகொள்ள முடியாமல் ஆட்சியை மாற்றி மாற்றிப் பார்க்கிறார்கள் என்பதுதான். 1956 ஆம் ஆண்டைத் தொடர்ந்து எவ்வாறு இலங்கையில் ஐ.தே.க. வினரும் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஆட்சியதிகாரம் மாறிமாறிக் கைமாறியதோ அவ்வாறான நிலைதான் இந்தியாவிலும் ஏற்படக் கூடுமென்பதை இத்தேர்தல் முடிகள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே இப் பாராளுமன்ற ஜனநாயகம் எமது கீழைத்தேச நாட்டுக்குப் பொருத்தமானதா என்ற வினாவை எழுப்பி நிற்கின்றது.

## சர்வதேச அந்தஸ்து

இந்தியாவின் சர்வதேச அந்தஸ்து இந்திராவின் ஆட்சியின்போது பலமடையுமென்பது உண்மையே. வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்து இந்திராவின் ஆட்சியில் ஒருவேகமும், ஓர் உறுதியும் நிலவும். இந்தியாவின் இன்றைய சர்வதேச சூழ்நிலையின்படி ரஷ்யாவுடன் உறவை நெருக்கமாக்குவதுதான் ஐதார்த்தமானது ஏனெனில் சீன அமெரிக்கநட்புறவும் பாகிஸ்தான் அமெரிக்க நட்புறவும் இந்தியாவை ரஷியாவின் நட்புறவை நாடுமாறு நிற்பந்திக்கின்றன. பொதுவாக இந்திராகாந்தியின் ஆட்சிக்காலத்தில் இந்திய ரஷ்ய நட்புறவு சுமுகமானதாக இருந்துள்ளது ஆனால் வெளிநாட்டுக் கொள்கையை பொறுத்து இந்திரா எவ்வாறு நடக்கப் போகிறார் என்பது பலர் மத்தியிலும் ஓர் ஆர்வமான விடயமாகவே உள்ளது. ஆப்கானிஸ்த்தான் ஈரான் பிரச்னை சம்பந்தமாக இந்திரா கடைப்பிடிக்கப் போகும் கொள்கை எப்படியானதென்பதை அரசியல் அவதானிகள் உற்று நோக்கிய வண்ணமிருக்கிறார்கள். இப்பிரச்னைகள் மீதான இந்திராவின் நடவடிக்கைகள் இந்தியாவின் சர்வதேசநிலைமையைத் தெளிவுபடுத்தும்.

## இந்தியாவின் ஐக்கியம்

தேர்தல் நிகழமுன்பு 80-ம் ஆண்டுத்தேர்தலை உற்றுநோக்கிக் கொண்டிருந்த அரசியல் அவதானிகள் இந்தியாவில் மாநிலங்களின் தனித்துவப் போக்கு வளர்ச்சியடையப் போகிறதென்றும் இந்தியாவின் ஐக்கியம் குலையக்கூடுமெனவும் தேசியக்கட்சிகள் வெற்றியீட்டாத கட்டத்தில் மாநிலக் கட்சிகளின் கைதான் ஓங்குமெனவும் இது ஐக்கிய இந்தியாவிற்குப் பாதகமானதாக அமையப் போகிறதெனவும் எதிர்பார்த்தார்கள். ஆனால் இத்தேர்தல் மூலம் இந்திராகாந்திக்கு அகில இந்திய ரீதியாகக்கிடைத்த வெற்றியானது இந்தியாவின் ஐக்கியத்தைக் கட்டி காப்பதற்கு இந்திராவிற்கு ஓர் சந்தர்ப்பத்தைக் கொடுத்துள்ளதென்றே குறிப்பிடலாம். வடநாடு, தென்னாடு என்கின்ற பேதத்தின் வேகம் கூட இத்தேர்தலில் தணிந்துள்ளதென்றே கூறலாம். இந்திராவிற்கு தென்னாடு அமோக ஆதரவளித்துள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சரியான முறையில் இந்தியாவின் ஐக்கியத்தை பலப்படுத்துவாரா? என்பதை எதிர்காலம் தான் காட்ட வேண்டும்.

## பத்திரிகைச் சுதந்திரம்

இந்திராகாந்தி தனது ஆட்சிக்காலத்தில் பத்திரிகைகளைக் கடுமையாகத் தணிக்கை செய்து வந்தார். அதனால் 77-ம் 78-ம் ஆண்டுத்தேர்தல்களில் பத்திரிகைகள் இந்திராவிற்கு எதிரானவையாக இருந்துள்ளன. இதனுற்தான் இந்திராவின் உண்மையான செல்வாக்கைப் பத்திரிகைகள் மறைத்து வந்துள்ளன. தனது ஆட்சிக்காலத்தில் பத்திரிகைகள் கடுமையாகத் தணிக்கை செய்யப்பட்டதென்பதை இன்றைய தேர்தல் வெற்றியின் மத்தியில் இந்திரா ஒப்புக் கொண்டிருக்கின்றார். பொதுவாக இந்திரா காந்தி தனது கடந்த காலத்தவறுகளை ஒப்புக்கொள்வதால் தனது எதேச்சதிகாரப்போக்கைக் கைவிட்டு விரும்பதகுந்த முறையில் ஆட்சி செய்வாரென எதிர்பார்க்கலாம்.

## இந்திராகாந்தி சஞ்சைகாந்தி

இந்திராகாந்திக்கு மகன் சஞ்சைகாந்தி ஓர்தலையிடியாகவே அமைந்திருப்பாரென எதிர்பார்க்க முடிகின்றது. பொதுவில் இந்திராவின் இனி நிகழப்போகும் ஆட்சியின்போது சஞ்சைகாந்தியினதும் அவரது நண்பர்களதும் செல்வாக்கு எப்படி அமையப் போகிறதென்பது ஓர் பரபரப்பான எதிர்பார்ப்பாகும். நேருகுடும்பத்திலேயே சஞ்சைகாந்திதான் படிப்பாற் குறைந்தவராவார். ஒருமுறை பத்திரிகை நிருபர்கள் சஞ்சைகாந்தியிடம் நீர்வாசிக்கும் புத்தகங்கள் எவை? எனக் கேள்வி கேட்டபோது அவர் வரலாறு தத்துவம் நாவல் வேறும் அறிவியற்புத்தகங்கள் வாசிப்பதில்லையெனத் தெரியவந்தது சந்சையிடம் நாட்டுப்பற்று சமூகப்பற்றென்பன இல்லை என இதன் மூலம் உணர முடிகின்றது. சஞ்சை காந்தியாற்தான் இந்திராகாந்தி பல கட்டங்களில் அவமானப்படுத்தப்பட்டுள்ளார். தேர்தற் பிரசாரத்தில் சஞ்சைகாந்திக்கெதிரான கருத்துக்களே அதிகமாகப் பேசப்பட்டுள்ளன. இந்திரா உண்மையிற் சஞ்சையின் தலையிடியை எவ்வாறு சமாளிக்கப் போகிறாரென்பதிலிருந்தும் அவரது ஆட்சியின் சிறப்பு தங்கியுள்ளது.

பொதுவாகக் கூறுவதானல் இந்தியாவின் சர்வதேசக் கௌரவத்தையும் நேரு குடும்பத்தின் இழந்த கௌரவத்தையும் காப்பாற்றுவதற்கு இந்திராகாந்திக்கு இத்தேர்தல் வெற்றி ஓர் சந்தர்ப்பத்தை அளித்துள்ளது. நேரு குடும்பத்தினர் குடும்ப ஆட்சி இந்திய அரசியலில் வளர்ச்சியடையாதிருக்குமானல் அதனை இந்திரா காப்பாற்றுவாரானல் இந்தியாவின் ஜனநாயகம் ஓரளவு உலகரங்கில் மதிக்கப்படும். பொதுவில் குடும்ப ஆட்சி வளருமா? இந்திரா சர்வாதிகாரப் போக்கிற் செல்வாரா? என்பதற்கு எதிர்காலம் தான் பதில் கூறவேண்டும்.

### திருத்தப்பட வேண்டும்

(வவுனதீவு)

படுவான்கரைப்பிரிவில் சூறுவளியால் சேதமடைந்த பாடசாலைக் கட்டடங்கள் அனைத்தும் துரிதகதியில் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென இப்பகுதிப் பெற்றோர்களும், பல பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்தோரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்காலிக பாடசாலைக் கட்டிடங்கள் சரிந்துவிழும் நிலையிலுள்ளதாகப் பல பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிக்களிப்பில் கருணாநிதி கூறுகிறார்

# எம். ஜி. ஆரின் ஆட்சிக்கு முடிவுகட்டும் தமிழகமக்களின் எண்ணத்தை வலியுறுத்துகிறது லோகசபைத் தேர்தல்

## மத்திய மந்திரிசபையில் தி. மு. க. சேரும் என்ற பேச்சுக்கே இடமில்லை

(சென்னை)

தமிழ்நாட்டில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக நடைபெற்ற தவறுகள் நிறைந்த திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் அ.தி.மு.க. ஆட்சிக்கு ஒரு முடிவுகட்ட வேண்டும் என்ற தமிழக மக்களின் எண்ணத்தை நடந்து முடிந்த இடைக்காலத் தேர்தல் வலியுறுத்துகின்றது.

மத்தியில் வலுவான அரசு இருக்க வேண்டும் என்ற பொதுமக்களின் ஆவலையும் இத் தேர்தல் எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி சென்னையில் நிருபர்களிடம் கூறினார்.

மத்தியில் இந்திரா காங்கிரஸ் அரசுடன் சேர்ந்து மத்திய அமைச்சரவையில் தி.மு.க.வும் அங்கம் வகிக்கும் என்பபேச்சுக்கே இடம் இல்லை என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

சட்டசபையில் அரசியல் கட்சி ஒன்று ஆட்சிநடத்தும் அரசுக்கு எதிராகக் கொண்டு வரும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைவிட இப்போது இத்தேர்தலில் மக்கள் அளித்திருக்கும் அவநம்பிக்கைத் தீர்ப்பு மிகவும் வலிமை உடையது என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

நாளை அல்லது நாளைமறுதினம் புதுடில்லி சென்று திருமதி காந்தியுடனும் மற்றும் தமிழக, டில்லி தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் பாண்டிச்சேரி மந்திரிசபை அமைக்கப்படுமென்றும் அவர் கூறினார். (இ)

......

## சரண்சிங் வெற்றி

புதுடில்லி, ஜன. 8

காபந்து பிரதமர் திரு. சரண்சிங் உத்தரப் பிரதேசத்தில் உள்ள பக்பத் தொகுதியில் 1 லட்சத்து 65 ஆயிரம் வாக்குகளால் வெற்றி பெற்றார்.

இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு. ராம்சந்த் மிக்கலே திரு. சரண்சிங் கடந்த 77 ம் ஆண்டு தேர்தலில் 1 லட்சத்து 21 ஆயிரம் வாக்குகளால் வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ராஜ்நாராயண் தோல்வி

புதுடில்லி, ஜன. 8

இந்திய காபந்துப் பிரதமர் திரு. சரண்சிங்கின் லோக்தள் செயல் தலைவர் திரு. ராஜ்நாராயண் வாரணசித் தொகுதியில் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த திரு. கமலாபதி திருப்பாத்தி 24,735 அதிகப்படி வாக்குகளால் திரு. ராஜ்நாராயணைத் தோற்கடித்தார்.

1977ம் ஆண்டுத் தேர்தலில் ராய்பரேலித் தொகுதியில் திருமதி இந்திரா காந்தியை இவர் தோற்கடித்தவரென்பது குறிப்பிடத்தக்கது. )இ)

## பஹுகுணா, சுக்ளா, சவான் பிரமானந்த ரெட்டி வெற்றி

### பல மாநிலஅமைச்சர்கள் தோல்வி

புதுடில்லி, ஜன. 8

முன்னாள் மத்திய அமைச்சர்களான திரு. எச். எம். பஹுகுணா, திரு. பிரமானந்த ரெட்டி, திரு. வி. சி. சுக்ளா, டாக்டர் சங்கர் தயாள்சர்மா திரு. ராம் சிங்கர் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

பஹுகுணா, சுக்ளா. சஞ்சாய் காந்தி, சர்மா மோகன் லால் சுக்காடியா அனைவரும் இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள்.

துணைப்பிரதமர் திரு.சவான் அர்ஸ் காங்கிரஸ் சார்பிலும் திரு. ராம்சிங்கர் லோக்தள் சார்பிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

முன்னாள் அமைச்சர்களான ரி. ஏ. பஸ்மாகன்தாரியா, பி. இராமச்சந்திரன், அசோக் மேத்தா, புருஷோத்மன் கௌசிக் பிரஜிலால்மா ஆகியோர் உட்பட பிலுமோதி, தினேஷ்சிங். திருமதி பார்வதி கிருஷ்ணன், திருமதி சரோஜினி மகிஷி ஆகியோர் தோல்வியைத் தழுவியுள்ளனர். (இ)

## இந்திராவுடன் போட்டியிட்ட அனைவரும் கட்டுப்பணம் இழந்தனர்

(புதுடில்லி)

ஆந்திரப் பிரதேசம் மேடத் தொகுதியிலிருந்து ஆகக்கூடுதலாக 2 லட்சத்து 19 ஆயிரம் வாக்குகளால் வெற்பெற்ற திருமதி இந்திதிராகாந்தி உத்தரப்பிரதேசம் ராய்பரேலி தொகுதியில் ஒரு லட்சத்து 73 ஆயிரம் அதிகப்படியான வாக்களால் வெற்றிபெற்றார்.

இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட 3 லட்சத்து 91 ஆயிரத்து 360 வாக்குகளில் திருமதி கரந்திக்கு 2 லட்சத்து 23 ஆயிரத்து 903 வாக்குகள் கிடைத்தன.

ஜனதா கட்சி சார்பில் போட்டியிட்ட திருமதி விஜயராஜேஸ்வரி சிந்தியா உட்பட போட்டியிட்ட ஏனைய வேட்பாளர்கள் கட்டுப்பணம் இழந்தனர்.

1966 ம் ஆண்டு இந்தியாவின் பிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் இந்தியாவில் நடைபெற்ற ஐந்து தேர்தல்களிலும் போட்டியிட்ட திருமதி இந்திரா காந்தி இம்முறையே ஆகக் கூடிய மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றுள்ளார்.

## 7 வது தடவையாக ஜெகஜீவன் வென்றார்

புதுடில்லி, ஜன. 8

ஜனதா கட்சித் தலைவரும் முன்னாள் அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ஜெகஜீவன்ராம் பீகார் மாநிலத்தில் உள்ள சாஸாராம் தொகுதியில் 51,171 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

எண்கோணப் போட்டியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரை இவர் தோற்கடித்தார்.

இதே தொகுதியில் இவர் ஏழாவது தடவையாகத் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

......

## மாநில ரீதியாக சில முடிவுகள்

(புதுடில்லி)

மாநிலவாரியாகச் சில தேர்தல் முடிவுகள் வருமாறு:

**பஞ்சாப்**

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள 13 லோக்சபைத் தொகுதிகளில் 12 தொகுதிகளை இந்திரா காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

**ஆந்திரா 39**

| | |
|---|---|
| இந்திரா காங்கிரஸ் | 38 |
| அர்ஸ் காங்கிரஸ் | 01 |

**கர்நடாகம் 28**

| | |
|---|---|
| இந்திரா காங்கிரஸ் | 27 |
| ஜனதா | 01 |

**மகாராஷ்டிரா 48**

| | |
|---|---|
| இந்திரா காங்கிரஸ் | 39 |
| ஜனதா | 08 |
| அர்ஸ் காங்கிரஸ் | 01 |

**கேரளம் 20**

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி முன்னணிக்கு 12 தொகுதிகள்.

இந்திரா காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக் முன்னணிக்கு 8 தொகுதிகள்.

கட்சி நிலை.

| | |
|---|---|
| மார்க்ஸிய கம்யூனிஸ்ட் | 06 |
| அர்ஸ் காங்கிரஸ் | 03 |
| இந்திய கம்யூனிஸ்ட் | 02 |
| கேரளக்காங். மாநிலகுழு | 01 |
| இந்திரா காங்கிரஸ் | 05 |
| இந்திய முஸ்லிம் லீக் | 02 |
| கேரளகாங். ஜோசப்குழு | 01 |

**குஜராத் 26**

| | |
|---|---|
| இந்திரா. காங்கிரஸ் | 25 |
| ஜனதா | 01 |

**ஒரிஸ்ஸா 20**

| | |
|---|---|
| இந்திரா காங்கிரஸ் | 19 |
| லோக்தள் | 01 |

**அருணசல் பிரதேசம் 3**

| | |
|---|---|
| இந்திரா காங்கிரஸ் | 03 |

## புதுவையும் இந்திராவுக்கே

(புதுச்சேரி)

புதுச்சேரியின் ஒரே ஒரு லோகசபைத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரே வெற்றி பெற்றுள்ளார்.

இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த திரு. பி. சண்முகம் ஜனதா கட்சி வேட்பாளர் திரு. எம்.ஆர். லட்சுமி நாராயணனை 98 ஆயிரம் மேலதிக க்குகளால் வெற்றிபெற்றுள்ளார், (இ)

## கலைஞரின் வெற்றிக்கு இளந்தமிழர் மன்றம் வாழ்த்து

(புங்குடுதீவு)

ஈழத்துத்தமிழர்களின் இதய உணர்வுகளை திராவிட முன்னேற்றக்கழகத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே வெளிப்படுத்தியதன் மூலம் மொழியால் ஒன்றுபட்ட தன்மையை பாருக்குப் பறைசாற்றியதோடு அடக்குமுறையை அராஜகத்தை எங்கும் எதிர்ப்பேன் என்று சங்க நாதம் செய்த தாங்களும் தங்கள் அணியும் வெற்றிவகை சூடியிருப்பது கண்டு ஈழத்து இளந்தமிழர்கள் எல்லாம் அகமிகமகிழ்ந்து ஆர்ப்பரித்து நிற்கிறார்கள்.

தமிழ்நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் திராவிடமுன்னேற்றக்கழகமும் அகில இந்திய ரீதியில் இந்திரா காங்கிரஸ் கட்சியும் ஈட்டிய வெற்றியைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக்கழகத்தலைவர் திரு. மு. கருணாநிதிக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. எஸ். கே. மகேந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது

இந்த வெற்றி நிலையான அரசியல் கொள்கைக்கும் விழுப்புண்கள் பலபட்டதியாக உள்ளங்களுக்கும் தங்களது அரசியல் சாணக்கியத்துக்கும் கிடைத்த வெற்றி

(5-ம் பக்கம் பார்க்க)

......

## பவுண் விலை வீழ்ச்சி!

(புதுடில்லி)

லோகசபைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்றதையடுத்து, தங்கம், வெள்ளியின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இந்திராவுக்கு எம். ஜி. ஆர். பாராட்டு

(சென்னை)

இந்திய இடைத் தேர்தலில் திருமதி இந்திரா காந்திக்குக் கிடைத்த அபார வெற்றி குறித்து தமிழக முதல்வர் திரு. எம். ஜீ. இராமச்சந்திரன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்

திருமதி காந்தியின் தலைமையின் கீழ் இந்தியா சகல துறைகளிலும் முன்னேற்றம் அடையுமெனத் தாம் நம்புவதாக திரு. எம். ஜீ. இராமச்சந்திரன் தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

**அப்துல் சமத் பாராட்டு**

தமிழ்நாட்டிலுள்ள வேலூர் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள மூஸ்லிம் லீக் பிரமுகர் ஜனாப் அப்துஸ் சமத்தும் திருமதி காந்தியின் வெற்றி குறித்து அவரைப் பாராட்டியுள்ளார்.

திருமதி காந்தியின் தலைமையில் அவரது அபாரத் திறமையினால் நாட்டில் அமைதியும், நலச் சிறப்பும் பொருந்திய புதுச் சகாப்தம் ஒன்றுக்கு வழிவகுக்குமெனத் தாம் நம்புவதாக அவர் தமது செய்தியில் கூறியுள்ளார், (இ)

## தி.மு.கவுக்கு மீண்டும் நூற்றுக்கு நூறுவீதம் வெற்றி

(சென்னை)

இந்திய லோகசபைத் தேர்தலில் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு மீண்டும் ஒருமுறை நூற்றுக்கு நூறு வெற்றி கிடைத்துள்ளது.

இந்திரா காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகிய இரு கட்சிகளுடனும் கூட்டாசப் 16 தொகுதிகளில் போட்டியிட்ட தி. மு. க. சகல தொகுதிகளிலுமே வெற்றி பெற்றுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 1969-ம் ஆண்டிலேயே முதன்முதலாக நூற்றுக்கு நூறு வெற்றி கிடைத்தது.

அத்தேர்தலில் 25 தொகுதிகளில் போட்டியிட்ட தி. மு. கவுக்கு 25 கொகுதிகளிலுமே வெற்றி கிடைத்தது.

1971-ம் ஆண்டு தேர்தலில் தி. மு. க. 24 தொகுதிகளில் போட்டியிட்டு 23 தொகுதிகளைக் கைப்பற்றியது. (இ)

Digitized by Noolaham Foundation



இலங்கை இளங்கலைஞர் மன்ற கட்டிட நிதிக்காக இன்று புதன்கிழமை மாலை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்திலும், எதிர்வரும் சனிக்கிழமை மாலை யாழ். திறந்தவெளி அரங்கிலும் பிரபல தென்னிந்தியப் பாடகர் சங்கீத கலாநிதி எம். பாலமுரளி கிருஷ்ணு இன்னிசை விருந்தளிக்கவிருக்கிறார். அன்னவரப்பு இராமஸ்வாமி வயலினும், தஞ்சாவூர் உபேந்திரன் மிருதங்கமும் வாசிப்பார்கள்.

# அமைச்சர் அத்துலத் முதலி யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 22-ந் திகதி நடைபெறவிருக்கும் வர்த்தக கருத்தரங்கில் வர்த்தக, கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி கலந்து கொள்வார்,

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அகில இலங்கை வணிகர் கழகம் நடாத்தும் இக் கருத்தரங்கில் பிரதி அமைச்சர் திரு. எம்.எஸ். அமரசிறி, யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள். (க-அ)

# “ஒற்றுமைவிருத்திக்கு வி.போட்டிகள் அவசியம்”

-வவனியா அரசஅதிபர்

(புளியங்குளம்)

''பின்தங்கிய மாவட்ட மக்களிடையே ஒற்றுமையையும் நல்ல மனப்பாங்கையும் விருத்தி செய்ய விளையாட்டுப் போட்டிகள் முக்கியமானவை'' என்று வவனியா சைவப்பிரகாச வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் வவனியா அரசாங்க அதிபர் திரு. ஜி. முதுதயாயக்கா கூறினர்.

கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் உடற்பயிற்சி ஆகிய கருத்தரங்குகளில் பங்கு பற்றிய அனைவருக்கும் சான்றிதழ்களை செல்வி யசோதா நடராஜா திரு. எஸ். நடராசா, திரு. எஸ். மரியதாஸ் ஆகிய விளையாட்டு உத்தியோகத்தர்களை வழங்குமாறு அரசாங்க அதிபர் வேண்டிக்கொண்டார். இக்கருத்தரங்கை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். மரியதாஸ் ஒழுங்கு செய்திருந்தார், (அ(

## கொழும்பு--யாழ்.

# மேலதிக இரவு ரயில் சேவை தினசரி நடைபெற ஏற்பாடு

(கொழும்பு)

தற்போது வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் இரவு 9-05க்கும் கொழும்புக் கோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் இரண்டாவது இரவு புகையிரதத்தைத் தினமும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு ரயில்வே இலாகா நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த ரயில்சேவை அடுத்த மாதத்திலிருந்து தினசரிச் சேவையாக மாற்றப்படுமென ரயில்வே பொதுமுகாமையாளர் திரு. ஏ. எல். பீரிஸ் தெரிவித்தார். (வெ)

## தென்மராட்சி கிழக்கில்

# சமூக பொருளாதார ஆய்வு

(யாழ்ப்பாணம்)

சமூக பொருளாதார ஆய்வின் இரண்டாம் கட்ட ஆய்வு வேலைகள் தென்மராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த இடங்களில் நடைபெறுகின்றது.

இவ்ஆய்வின் போது சாவகச்சேரி தொகுதி உயர்கல்வி மாணவ மாணவிகள் தீவிரமாக பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

அத்துடன் வேலையற்றிருக்கும் பட்டதாரி இளைஞர்களும் யுவதிகளும் பாடசாலை ஆசிரியர்களும் ஈடுபட்டு உதவுகின்றனர்.

ஒவ்வொரு கிராம சேவை அலுவலர் பிரிவுகளுக்கும் அப்பகுதிக்கிராமசேவை அலுவலருக்கும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தரும் பட்டதாரி இளைஞரும் பொறுப்பாக விருந்து சேவை செய்கின்றனர்.

இப்பணியினைப் பல்கலைக் கழகப் பேராசிரியரும் திட்ட இயக்குனருமான திரு. [illegible] அடிக்கடி [illegible] செய்து வருகிறார். (அ)

# இடது கம்யூனிஸ்ட் ரஷ்யாமீது கண்டனம்

(கொழும்பு)

''ஆப்கானிஸ்தானில் 50,000க்கும் மேற்பட்ட துருப்புக்களையும், டாங்கிகளையும், யுத்த தளபாடங்களையும் குவித்து அப்பட்டமான ஆக்கிரமிப்பை நடத்தியதன்மூலம் சோவியத் யூனியன் தனது ஏகாதிபத்தியத் தன்மையை உலகிற்கு நன்கு தெளிவாகக் காட்டியுதுளது. இவ்வாக்கிரமிப்பானள் சுதந்திரம், சுயாதிபத்தியம், இறைமை ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும் நாடுகளுக்கு விடப்பட்டுள்ள பயங்கரப் பயமுறுத்தலாகும். ஆப்கான் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையை உலக மக்களோடு சேர்ந்து எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது''

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி [இடது] வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும் அவ் அறிக்கை கூறியுள்ளதாவது.

''இன்று ஆப்கானிஸ்தானுக்கு நடந்த அதே கதி நாளை நமது நாட்டிற்கும் நடக்கலாம் ஆதலால் நமது நாட்டின் சகல தேசபக்த ஜனநாயக முற்போக்கு புரட்சிகர சக்திகள் ஒன்றிணைந்து ஒரே குரலில் சோவியத் ஆக்கிரமிப்பைக் கண்டித்து எதிர்க்க வேண்டும் என்ற வேண்டுகோளை எமது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது)விடுக்கின்றது''.

# வெள்ளிவிழா

(புலோலி)

அருட் செல்வி லூயிஸ்மேரி துறவற வாழ்வில் புகுந்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆற்றிவரும் சேவையைச் செம்பியன்பற்று மக்கள் வெள்ளிவிழாவாகக் கொண்டாடினர்,

கடந்த 7ம் திகதி இவ்விழாவை முன்னிட்டுச் செம்பியன்பற்றுப் புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் நன்றிப் பலிப்பூசை நடைபெற்றது. (அ)

# மண்ணெண்ணை முத்திரை கிடைக்கவில்லையாம்

(புலோலி)

கரவெட்டி, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவிற்குட்பட்ட பல குடும்பங்களுக்கு அராங்கத்தினுல் வழங்கப்படும் மண்ணெண்ணெய் முத்திரை பெறக்கூடிய தகுதியிருந்தும் அவர்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்படவில்லையாம்.

மின்சார வசதிகள் கூட இல்லாத இக்கிராமப் பகுதி மக்களின் குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்படாதபடியால் அக்குடும்பத்தவர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளதுடன், அதிருப்தியும் அடைந்துள்ளனர். இது பற்றி உதவி அரசாங்க அதிபர்களுடன் தொடர்பு கொண்டபோது மண்ணெண்ணெய் முத்திரை முடிவடைந்து விட்டதாகக் கையைவிரிக்கிறர்கள், (அ)

# வடபகுதி பாதுகாப்புப் படைகளின் புதிய தளபதி

(கொழும்பு)

பிரிகேடியர் ஏச். வி. அத்துக்கோறள வடபகுதிப் பாதுகாப்புப் படைகளின் தளபதியாகக் கடந்த வாரம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த வாரம் வடபகுதியின் நிலைமைகளைப் பார்வையிடும்பொருட்டு அங்கு விஜயஞ்செய்தார். இதுவரை காலமும் வடபகுதியின் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக இருந்த பிரிகேடியர் வீரதுங்காவின் இடத்திற்குத் தற்பொழுது இவர் நியமிக்கப்பட்டுள்ளார். பிரிகேடியர் வீரதுங்கா மீண்டும் இராணுவத் தலைமைக் காரியாலயத்திற்குத் தனது உயர் பதவியை வகிக்கச் சென்றுள்ளார். ஜனவரி முதலாந் திகதியிலிருந்து இராணுவத்தினர் தென், மத்திய, வடமத்திய, வடபிரதேசங்களிலும் கண்காணிப்பை மேற்கொண்டுள்ளனர்.

பிரிகேடியர் அத்துக்கோறள இராணுவ மாஅதிகாரியாகவும் வடபகுதிப் பாதுகாப்புப்படைகளின் தளபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார். வடபகுதியின் பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவற்றிற்கும் இனிமேல் இவரே பொறுப்பாகவிருப்பார்

வடபகுதிப் பாதுகாப்புப் படைகளின் தளபதியாக கடந்த ஜூன் மாதம் நியமனம் பெற்ற பிரிகேடியர் வீரதுங்கா டிசம்பர் 31-ந் திகதியுடன் பயங்கரவாதத்தை ஒழிக்கும்படி ஜனதிபதியிட்ட கட்டளையை நிறைவேற்றியிருந்தார். வடபகுதியில் தற்போது நிலைமை கட்டுப்பாட்டின் கீழுள்ளதாகவும் இவர் அரசாங்கத்திற்குஅறிவித்திருந்தார்.

இவரிடமிருந்து கடமையைப் பொறுப்பேற்ற பிரிகேடியர் அத்துக்கோறள அண்மையிலேயே இப்பதவி உயர்வைப் பெற்றார்.

இவர் இராணுவ தலைமைக் காரியாலயத்தில் நிர்வாகப் பணிப்பாளராக இந் நியமனத்தைப்பெறமுன் கடமையாற்றினர். (வெ)

## ஞாபகார்த்தக்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுவாமி ஞானப்பிரகாசர் ஞாபகார்த்தக் குழு அமைப்பதையொட்டி பொதுக்கூட்டமொன்று நாளைமாலை5மணிக்கு யாழ். வைமன் வீதியில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கான ஒழுங்குகளை டாக்டர் ஏ. தர்மலிங்கம் ஏற்பாடு செய்துள்ளார். (வெ)

## கலைஞரின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யென்பதில் ஐயமில்லை. இந்த மகத்தான வெற்றி கேட்டு மகிழாத இதயங்கள் எங்கும் இருக்க முடியாதென்றே கருதுகின்றேன் அறிஞர் அண்ணுவும் பெரியாரும் காட்டிய பாதையில் தங்கள் தலைமையில் செயற்பட தமிழ்நாடு மீண்டும் ஒருப்பட்டு நிற்கிறது என்பதை இத்தேர்தல் முடிவுகள் மூலமறிந்து நாம் இறும்பூதெய்துகிறேம்.

திருமதி இந்திராகாந்திக்கு திரு.எஸ். கே. மகேந்திரன் வாழ்த்துத் தந்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## பொலிஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பித்தார்.

இவ்விண்ணப்பத்தைத் தொடர்ந்து நீதவான் சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் கருணரத்தினவைகைதுசெய்ய வாரண்ட் பிறப்பித்து விசாரணையை இம்மாதம் 21-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். (க)

(விபரம் 8-ம் பக்கம்)

## நினைவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிலுள்ள நினைவு சின்னத்துக்கு அருகில் நாளைக்காலை அஞ்சலி செலுத்தப்படவிருக்கிறது.

சகல சமய வழிபாடுகள் இடம்பெறும் இந்த வழிபாட்டில் வண.பிதா சகாயநாயகம், வண. பிதா சா. அல்பிநூட் அடிகளார், ஜனுப் பாஷா மொகதீன் பிச்சை, சிவஸ்ரீ க. குகதாஸக் குருக்கள் பங்கு கொள்வார்கள்.

நாலை மாலை யாழ். நகரமண்டபத்தில் அஞ்சலிக் கூட்டம் திரு. கு. நேசையா தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் அருட்திரு. தனிநாயகம்அடிகளார், யாழ். நகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன், பேராசிரியர் சு. வித்தியானந்தன், எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மற்றும் கூட்டணி எம்.பிக்கள் உட்படப் பலர் உரை நிகழ்த்துவார்கள்.

# பாஸ்போர்ட்: 3 புகைப்படங்கள்

(கொழும்பு)

'பாஸ்போர்ட்' [கடவுச்சீட்டு] பெறுவதற்குத்தேவைப்படும் புகைப்படங்கள் இரண்டிலிருந்து மூன்ருக அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய கடவுச்சீட்டுப் பெறுவதற்கு இதுவரை இரண்டு படங்களே தேவைப்பட்டன. இம்மாதம்முதலாம்திகதிமுதல் இப்புகைப்படங்களின் எண்ணிக்கை மூன்ருக அதிகரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆப்கான்நெருக்கடி

# ரஷ்யாவுக்குஉணவுஅனுப்ப அமெரிக்கா மறுப்பு

## ஏற்றுமதித்தடை அமுலுக்குவருகிறது

வாஷிங்டன், ஜன, 8

சோவியத் யூனியனுக்கு அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் சிலவற்றை நிறுத்திவிடுவதென்று அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் முடிவுசெய்துள்ளார்

இம்முடிவுக்கமையச் சோவியத்யூனியன் கேட்டுக்கொண்ட 1 கோடி 70 லட்சம் தொன் உணவுத் தானியங்களை அமெரிக்கா அந்நாட்டுக்கு அனுப்பாதென்று திரு. கார்ட்டர் தெரிவித்துள்ளார்.

கம்யூட்டர் போன்ற முக்கிய கருவிகளை ரஷ்யாவுக்கு விற்பனை செய்வதற்கு அமெரிக்க நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாதென்றும் திரு. ஜிம்மி கார்ட்டர் கூறினார்.

அமெரிக்கப் பிராந்தியக் கடலில் சோவியத் கப்பல்கள் மீன் பிடிப்பதற்கு இதுவரை வழங்கப்பட்டுவந்த சலுகைகள் இனிமேல் வழங்கப்படமாட்டாது என்றும் அவர் கூறினர். (இ)

# ஈரானிய ஷா மீது

## சர்வதேச விசாரணை

### பணயக்கைதிகள் விடுதலைக்கு இதுவே வழிவகுக்கும்என்கிறார்வால்ட்ஹெய்ம்

நியூயோர்க், ஜன. 8

ஈரானிய ஷா மீதான குற்றச்சாட்டுக்கள் மீது சர்வதேச விசாரணை ஒன்றை நடாத்தும்பட்சத்தில் அமெரிக்கப் பணயக் கைதிகள் விவகாரத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கமுடியுமென்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெய்ம் தெரிவித்துள்ளார்

ஷா மீது சர்வதேச விசாரணையொன்றை நடத்துவது குறித்துத் தாம் அமெரிக்க ஜனதிபதி திரு, ஜிம்மி கார்ட்டருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமது யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஷா மீது விசாரணை நடைபெற்றால் அமெரிக்கப் பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படுவரெனத் தாம் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார். (இ)

......

ஆப்கானிலிருந்து வெளிநாட்டுப் படைவெளியேற்றம்:

# 4 நாடுகள் பிரேரணையை ரஷ்யா 'வீட்டோ' செய்தது

நியூயோர்க், ஜன. 8

ஆப்கானிஸ்தானுக்குள் லிருந்து சோவியத்யூனியன் துருப்புக்கள் உடனடியாக வெளியேற்றப்படவேண்டும் என்று ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையைச் சோவியத் யூனியன் தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பாவித்து ரத்துச்செய்தது.

பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், சாம்பியா, நிகேர் ஆகிய நான்கு அணிசேரா நாடுகள் மேற்படி தீர்மானத்தை ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவந்தன.

இதையடுத்து ஐ. நா. பொதுச்சபை, விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டி இவ்விவகாரம் குறித்து ஆராயவேண்டுமென்று பிலிப்பைன்ஸ் ஐ. நா. பொதுச் செயலாளரைக் கோரியுள்ளது. (இ)

## கட்டுப்பணம் இழந்தனர்

புதுடில்லி, ஜன. 8

முன்னாள் அமைச்சர் திரு. சிக்கந்தர் பக்த், லோக்தள் பொதுச் செயலாளர் திரு. ரவீந்திர பூரி ஆகியோர் கட்டுப் பணத்தை இழந்துள்ளனர். (இ)

## இந்திராவுக்கு மனோகரன் பாராட்டு

சென்னை, ஜன. 5

திருமதி இந்திரா காந்தியின் பிரமிக்கத்தக்க வெற்றி குறித்துத் தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு. கே. மனோகரன் பாராட்டுத் தந்தி ஒன்றை திருமதி காந்திக்கு அனுப்பியுள்ளார்.

திருமதி காந்தி, இந்தியாவைச் சரியானதிசையில் இட்டுச் செல்வாரென நம்புவதாக திரு. மனோகரன் தெரிவித்துள்ளார். (இ)

## ஸ்டீபன் தோல்வி

புதுடில்லி, ஜன. 3

இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. சி. எம். ஸ்டீபன் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

புதுடில்லியில் போட்டியிட்ட இவரை முன்னாள் வெளிநாட்டமைச்சர் திரு. அட்டல் பிகாரி வாஜ்பாய் (ஜனதா) 4 ஆயிரம் வாக்குகளால் தோற்கடித்தார். (இ)

## தரமுயர்வு

(அளவெட்டி)

அளவெட்டி வடக்கு உப-தபால் நிலையம் இம்மாதம் முதல் 'எ' பிரிவு தபால் நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இவ் உப தபால் நிலையம் இங்கு அமைக்கப்பெற்று 18 ஆண்டுகள் ஆகின்றன.

## ஈரானுக்கு ஏற்றுமதித் தடை

### ர்ட்டர் யோசனை

வாஷிங்டன், ஜன. 8

ஈரானுக்கு உணவு, மருந்து தவிர்ந்த ஏனைய பொருட்களை அமெரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்வதை நிறுத்துவது குறித்து ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் ஆலோசனை செய்துவருகிறார்.

பணயக் கைதிகள் விவகாரத்தில் ஈரான் கடைப்பிடித்து வரும் போக்கை மாற்றும் பொருட்டே இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறினர். (இ)

## ஆளில்லாதபோது வீடு எரிந்து சாம்பரானது


(மாவிட்டபுரம்)

வீட்டைப் பூட்டிவிட்டு யாழ்ப்பாணம் சென்று திரும்பியவர் தமது வீடு எரிந்து தரைமட்டமாயிருந்தது கண்டு திகைப்படைந்தார்.

அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த எம். சிவலிங்கம் என்பவரது வீடே இவ்வாறு தீக்கிரையானது.

அவர் வீட்டைப்பூட்டிவிட்டு யாழ்ப்பாணம் சென்றதாகவும், பின்னர் திரும்பிவந்து பார்த்தபோது வீடு தீக்கிரையாகித் தரைமட்டமாயிருந்ததாகவும் காங்கேசன்துறைப் பொலிசில் அவர் புகார் செய்துள்ளார்.

காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேக நபர்களைத்தேடி வலைவிரித்துள்ளனர். [அ]



100வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிருள்!
மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா
நடித்த
அந்தமான் காதலி
(வர்ணப்படம்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி: 10.30, பி.ப. 2.30, 6.00, 9.30
சிவாஜி, ஜெயலலிதா
ஜி.வரலட்சுமி
நடித்த
(புத்தம்புதிய பிரதி)
தாய்

100-வது வெற்றித்திருநாளை நோக்கி
சாந்தி (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30
போன்: 7642 6-30, 9-45
ஜெய்சங்கர் ஸ்ரீதேவி எம்.ஆர்.ராதா
அசோகன் ஸ்ரீகாந்த் மனோரமா சுருளி
நடித்த
டாக்ஸி டிரைவர்
வண்ணத்திரையோவியம்

A Hilarious Action Comedy Film For All Ages
RANEE (JAFFNA) Daily at: 10-30, 2-15
4-45, 7-15 & 9-45 p.m.
Terrence Hill Bud Spencer
Team up As A Pair Of Miami Beach
Combers Donning The Police
Unigorm Go About Busting
Cars And Crooks In Warner Brothers Presentation
CRIME BUSTERS

100-வதுவெற்றித்திருநாளைநோக்கி
ஸ்ரீதர் தினசரி காலை 10-30, பி, ப. 2-30, 6-15, 9-45
(யாழ் நகர்)
சிவாஜிகணேசன்-சுஜாதா
நடித்த
தீபம்
(வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, விஜயா, மனோரமா,
தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்ட்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்த்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜெய்சங்கர்
ஜெயசுதா
நடித்த பந்தாட்டம்

லிடோ (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30, 9-30
போன்: 7693
வெள்ளிக்கிழமை விரதம்

REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.
Your last chance to re-live the greatest moments of movie musical magic...
That's Entertainment Part-2
From 10th SKY RIDERS

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 25-ம்திகதி
புதன்கிழமை
9-1-1980

மேடம்:- நாள் எல்லாம் அலைச்சல், உடல் நலிவு தோன்றும், புதிய தொழில்களை இன்று நிறுத்திக் கொள்ளவும், எதிலும் அக்கறை நன்று.

இடபம்:- வெல்லம்போல் இனிக்கும் வாழ்க்கை, தெய்வ வழிபாட்டால் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், கால்நடை விருத்திக்குமிடமேற்படலாம்.

மிதுனம்:- உணவு விடுதி நடத்துபவர்கள் உற்சாகமடைவர், வியாபாரத் துறையில் தொடர்புகள் பெருகும், பொன்னான தினம்.

கடகம்:- துள்ளி வரும் வெள்ளிப்பணம் உங்களைச் சோபிதமடையச் செய்யும், ஒதிர்பாராத விருந்தினர் வருகைக்குமிடமுண்டு, சகோதர மகிழ்ச்சியுமுண்டு.

சிங்கம்:- கடமையாற்றுமிடத்தில் சதிவேலைகள் நடக்கக்கூடும், சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ள நேரிடும், எதிலும் நிதான புத்தி வேண்டும்.

கன்னி:- இன்னலின் பின்னல் சோர்வைத் தரும், வணிகத்துறையில் சம வருவாய்க்கிடமுண்டு, எதிலும் விரக்தி மனப்பான்மை தோன்றும்.

துலாம்:- பேச்சுவார்த்தையால் பெருமைக்கிடமுண்டு, நீண்டநாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும், நன்னாள்.

விருச்சிகம்:- அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் முனைவர், சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும், சகோதர சஞ்சலமும் உண்டு.

தனுசு:- அன்னைவழி ஆதரவு கிடைக்கும், விளையாட்டு வீரர்களுக்கு வெற்றித் தினம், வாகன சுகமுமுண்டு.

மகரம்:- புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும், குடும்பத்திலும் சுமுகமான நிலை தென்படும், பொறியியலாளர்க்கு பொன்னான தினம்.

கும்பம்:- சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும், சிலருக்கு நூதன ரோகமும் தென்படலாம், சுகாதாரத்தைப் பேணவும்.

மீனம்:- வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர்கள், இல்லத்தில் இனிமையான செய்தியுண்டு, வெளியிடத் தொடர்புகளுக்கு சிறப்பான தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

......

## தொழிற்சாலையில் திருடினராம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் வெற்று சிமெந்துப் பைகளைத் திருடியதாகத் தொழிற்சாலை ஊழியர் ஒருவர்மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணையை நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி ஒத்தி வைத்தார்.

பிரஸ்தாப ஊழியர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - லதா
உழைக்கும் கரங்கள்

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி-வாணிஸ்ரீ
குலமா குணமா

# ஆலயத் தொண்டன் இலங்கநாதன்



இணுவில் அருள் மிகு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலின் இன்றைய நற்தோற்றத்துக்கு தன்வாழ்நாளை அர்ப்பணித்துத் தொண்டாற்றி வாழ்ந்த நித்திய பிரமச்சாரி பொன். இலங்கநாதன் ஆத்ம ஈடேற்றம் பெற்றுவிட்டார். கலை, சமயம், பண்பாடு, விவசாயம் போன்றவற்றில் நிகரில்லா இணுவையூரில் சுப்பிரமணியம் பொன்னையாவுக்கும் செல்லமுத்து அம்மையாருக்கும் இளைய புதல்வனாய் தோன்றிய இலங்கநாதன் தெய்வ நம்பிக்கை மேலோங்க ஆண்டவன் திருவடிகளை அயராது வழிபட்டு வந்தார். அந்நியர் ஆதிக்கத்தால் அழிந்த இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலை இன்று அழகான அற்புதமான கோபுரம் வரை மேலோங்கத் திருப்பணியாற்றிய தொண்டனாய் இருந்தவர் இலங்கநாதன் பொன்னையா எனும் இவர் தந்தை நாடோறும் ஏற்றிவைத்த தூண்டாமணி விளக்கு இன்று இராஜ கோபுர உச்சிவரை மின் ஒளிப்பிரகாசமாய் மிளிர்கின்ற பெருமை அமரரைச் சாரும். அன்னார் ஆலயத் தொண்டுடன் மட்டும் நின்றுவிடவில்லை. தான் கல்விகற்ற இணுவில் சைவப்பிரகாச உயர்தர மகாவித்தியாலயத்தின் முன்னேற்றத்துக்கும் பாடுபட்டார்.

இலங்கைநாதன் பெருமை இலங்கையோடு மட்டும் நின்றுவிடவில்லை. லண்டன் மாநகரில் வெளிவரும் லண்டன் முரசு எனும் தமிழ் சஞ்சிகையே இவர் புகைப்படத்துடன் இவர் திருத்தொண்டைப் புகழ்ந்துள்ளது, ஆண்டுதோறும் இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் இராஜகோபுரகும்பாபிஷேக விழாவின்போது தென் இலங்கையிலிருந்து உயிர் யானையை இங்கு அழைத்து அதன்மேல் விநாயகப்பெருமானைத் திருவுலாச் செய்து வந்த பெருமையும் தொண்டர் இலங்கநாதனைச்சாரும். நித்திய பிரமச்சாரியாய் வாழ்ந்த இலங்கநாதன் ஆலயத் தொண்டே அருட்தொண்டு எனக்கொண்டு ஈழத்துஆலயங்கள் பலவற்றுக்கும் தன்னாலியன்ற தொண்டாற்றுமல் இருக்கவில்லை. சிதம்பரம் முதல் காசிவரை புண்ணிய தலங்களெல்லாம் அவர் கால் பட்டதே. கர்நாடக சங்கீதப் பிரியரான இலங்கநாதன் ஆண்டுதோறும் இராஜ கோபுர கும்பாபிஷேக விழாவின் போது ஈழத்து இசைக் கலைஞர்களை கௌரவிக்கத் தவறுவதில்லை.

சென்ற ஆண்டு இவ்விழாவில் தென் இந்திய கர்நாடக சங்கீத பூஷணம் சூலமங்கலம் சகோதரிகளை அழைத்துக்கௌரவித்தவர்களில்இவருமொருவர் இவ்வாண்டு அருள்மொழி அரசி என்னும் தமிழக வித்வானை அழைத்து அவரின் அறிவான நற்பிரசங்கத்தை மக்கள் கேட்க வசதி செய்தார். இத்தகைய நற்சேவை செய்த இலங்கநாதன் தனக்கு பிற்காலம் இணுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவிலுக்கு மின் ஒளி குறைவின்றி நிறைவாய் நிகழ வங்கியில் வைப்பிட்டு சூரியசந்திரர் உள்ளவரை தன் திருத்தொண்டு மிளிர வழி வகுத்துவிட்டு நாடோறும் தன் பொழுதைக் கழிக்கும் இணுவில் கந்தசாமி கோவிலின் அர்த்தமண்டபத்தில் ஞாயிறு (30-12-79) ஏகாதசி நோன்பன்று நண்பர்களுடன் அளவளாவும் போது இலங்கநாதனின் ஆத்ம ஜீவன் ஆண்டவன் திருவடியைச் சென்றடைந்தது. அன்னாரின் பூதவுடல் மறைந்தாலும் அவரின் புனிததிருத் தொண்டுகளை சைவஉலகு என்றுமே போற்றும் என்பதில் ஐயமில்லை.

என். ஆர் கோவிந்தசாமி,
(நாதஸ்வரவித்துவான்)
இணுவில்.

......

## புங்குடுதீவிற்கு இந்தியச் சிற்பாசாரியர்கள் வருகிருர்கள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பாணவிடைச் சிவன்கோயில் மகாகும்பாபிஷேகத்துக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பிள்ளையார், முருகன், சண்டேசுவரர், வயிரவர் ஆகிய ஆலயங்களில் சிற்பவேலைகள் செய்வதற்காகவும், சிவன், அம்மன் பண்டிகைகளில் சிற்பவேலைப்பாடுகளை நிறைவேற்றுவதற்தாகவும் தென்னிந்தியாவிலிருந்து சிற்பாசாரியர்கள் வரவழைக்கப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை கோண்டாவில் நா, சோமசுந்தரஸ்தபதியார் செய்து வருகிருர்.

ஒன்றரை லட்ச ரூபா செலவிலான பிரஸ்தாப ஆலயப் புனருத்தாரணவேலைகள் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரனின் மேற்பார்வையில், ஆலயபரிபாலன தர்ம கர்த்தாசபையினரால் பொது மக்கள் உதவியோடு செய்யப்படுகிறது. (அ)

## கடையில் கலாட்டா செய்தனராம்

(மாவிட்டபுரம்)

கடையொன்றினுள் அத்துமீறிப் புகுந்து கலாட்டா செய்ததுடன் 300 ரூபா பணத்தையும் கொள்ளையடித்தது தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டதுடன் ஒருவர் பொலிசாரால் தேடப்பட்டு வருகிருர்.

வசாவிளானைச் சேர்ந்த எஸ். கிறிஸ்தோபர் என்பவரது கடையினுள் அத்துமீறிப் புகுந்து கடையை உடைத்துக் கலாட்டா செய்ததுடன் அங்கிருந்து 300 ரூபா பணத்தையும் கோஷ்டியொன்று கொள்ளையடித்தது தொடர்பாக விசாரணையிலீடுபட்ட காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் பாவிலு ஜோசெப், ஜோசெப் ஜெயக்கொடி, ஜோசெப் சமரக்கொடி, ஜோசெப் செல்வக்கொடி ஆகியோரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் அவர்கள் பிணையில் விடப்பட்டனர்.

மேலும் இது தொடர்பாக ஜோசெப் தயாளராசா என்பவரை பொலிசார் தேடி வருகின்றனர். (அ)

......

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை ஆத்தியடி விநாயகர் ஆலயத்திருமுறை மன்றத்தினர் திருஞானசம்பந்த வித்தியாசாலை ஆசிரியர் திரு. சி. கனகநாயகத்திற்கு 'ஈழத்து அடிகளார்' என்னும் பட்டம் திருவெம்பாவை விழாவின் போது வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் சங்கரத்தை இந்து வாலிபர் சங்க செயலாளர் செல்வன் க. சிதம்பரநாதன் மற்றும் ஆசிரியர்கள் அதிபர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

தாலிக்கொடி மீட்பு!

# பொதுமக்கள்ஒத்துழைப்புக்கு பொலிஸ் அதிபர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தாலிக்கொடியைப் பவித்திரமாக வைத்துவிட்டு அதிகாலையில் கோயிலுக்குச் சென்றுதிரும்பியபெண், தாலிக்கொடி திருட்டுப்போயிருப்பதைக் கண்டார். பதினொரு தங்கப்பவுண் தாலிக்கொடி மட்டுமல்ல வேலைக்காரப்பையனையும் காணவில்லை!

இச்சம்பவம் காரைநகரில் களபூமி என்னுமிடத்திலுள்ள தியாகராஜா என்பவரது வீட்டில் நிகழ்ந்தது. இதுபற்றி தியாகராஜா பொலிசில் முறைப்பாடு செய்தார்.

அடுத்தநாள் யாழ்ப்பாண நகரில் தாலிக்கொடியொன்று விற்பதற்குஒரு நகைக்கடைக்கு வந்தவர்கள் மீது சந்தேகம் கொண்ட கடைக்காரர் நகை வியாபாரிகள் சங்கத் தலைவருக்கு அறிவிக்கவே அவர்ஆனைக்கோட்டைப் பொலிசுக்கு தகவல் கொடுத்தாராம்.

சுதுமலையைச் சேர்ந்த தயாபரன் என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதுடன் களவுபோன தாலிக்கொடியையும் ஒரு வீட்டிலிருந்து மீட்கப்பட்டது.

களவுப்பொருட்களை விலைக்கு வாங்காமல் திருட்டைக் காட்டிக்கொடுத்த நகை வியாபாரிகளுக்கு யாழ். மாவட்டப் பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா நன்றி தெரிவித்திருக்கிறார். பொது மக்களின் ஒத்துழைப்புடன் களவு, கொள்ளை போன்ற குற்றச் செயல்களைஒழித்துக்கட்டலாம் என்று நம்பிக்கையும் தெரிவித்திருக்கிறார்.

# தமிழ்நாடு நிலைமை
## ஒரு கண்ணோட்டம்

(சென்னை)

தமிழ்நாட்டில் தி. மு. க - இந்திரா காங்கிரஸ்- முஸ்லிம் லீக் கூட்டணி அமோக வெற்றியீட்டியுள்ளது.

தமிழக ஆளும் கட்சியான திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம்- ஜனதா-இந்திய கம்யூனிஸ்ட்- மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கூட்டணி இத்தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ளது.

**36 : 2**

தமிழ்நாட்டின் 39 லோகசபைத் தொகுதிகளில் முதலாவது கூட்டணிக்கு 36தொகுதிகளும், 2-வது கூட்டணிக்கு 2 தொகுதிகளும் கிடைத்துள்ளன.

**இந்திரா காங்கிரஸ்**

22 தொகுதிகளில் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் 20 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இவர்களில் 9 பேர் கலைக்கப்பட்ட லோகசபை உறுப்பினர்களாவர்.

16 தொகுதிகளில் போட்டியிட்ட தி. மு. க. 16 தொகுதிகளிலுமே வெற்றி பெற்றது! இவர்களில் திரு. மாயத்தேவர் மட்டுமே முன்னாள் லோகசபை உறுப்பினர். இவர் முன்னர் அ. இ. அ. தி. மு. கழக எம். பி. யாகவிருந்து கடைசி நேரத்தில் தி. மு. கழகத்தில் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தது.

**அ. இ. அ. தி. மு. க.**

24 தொகுதிகளில் போட்டியிட்ட அ. தி. மு. கவுக்கு 2 தொகுதிகள் மட்டுமேகிடைத்தன. கலைக்கப்பட்ட லோகசபையில் 18 அ. தி. மு. க. உறுப்பினர்கள் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஒரு தொகுதியில் மட்டுமே போட்டியிட்டு அதில் வெற்றி பெற்றது!

இந்திய கம்யூனிஸ்ட்கட்சியும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியும் தலா 3 தொகுதிகளிலும், ஜனதாகட்சி 9 தொகுதிகளிலும், லோக் தள் 13தொகுதிகளிலும், அர்ஸ் காங்கிரஸ் 10 தொகுதிகளிலும், காந்தி காமராஜ் காங்கிரஸ் 13தொகுதிகளிலும் போட்டியிட்ட போதிலும் இக்கட்சிகளுக்கு ஒரு தொகுதிகூடக் கிடைக்கவில்லை!

**சுயேச்சை: இடமில்லை!**

சுயேச்சை உறுப்பினர்கள் எவருமே பெற்றிபெறவில்லை.

கலைக்கப்பட்ட லோகசபை உறுப்பினர்கள் 24 பேர் போட்டியிட்ட இத்தேர்தலில் 15 பேர் தோல்வியடைந்தனர்.

தோல்வி யடைந்தடர்களும் கட்சிகளும் வருமாறு:

| | | |
|---|---|---|
| அ. தி: மு, க. | - | 08 |
| ஜனதா | - | 03 |
| இந். கம்யூ. | - | 02 |
| காந்தி காமராஜ் காங்கிரஸ் | - | 01 |
| இ. காங்கிரஸ் | - | 01 |

**சரண்...**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் மாபெரும் தேர்தல் வெற்றியைப் பாராட்டி, இலங்கையின் முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, பிரிட்டனின் முன்னாள் பிரதமர் திரு. ஜேம்ஸ் கலகன், பூட்டான் மன்னர், அமெரிக்க ராஜாங்க பேச்சாளர் ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பிவைத்துள்ளனர்.

இவர்களுடன், உள்ளூர்த் தலைவர்களான ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன் ராம், முன்னாள் ராஷ்டிரபதி வி. வி. கிரி ஆகியோர் தொலைபேசி மூலம் தங்களது வாழ்த்துக்களை நேற்றுத் தெரிவித்தனர்.

**கலைஞர் சந்திப்பு**

கூட்டு முன்னணியின் உதவியுடன் தமிழ்நாட்டில் பெரும் வெற்றிக்கொடியை நிலைநாட்டியுள்ள கலைஞர் கருணாநிதி நாளை புதுடில்லி சென்று புதுச்சேரி, தமிழ்நாடு நிலைமைபற்றி திருமதி இந்திரா காந்தியுடன் கலந்தாலோசிப்பார்.

**ராய்பரேலியிலும்**

திருமதி இந்திரா காந்தி ராய்பரேலி தொகுதியிலும் ஒரு லட்சத்து 73,000அதிகப்படியான வாக்குகளால்வெற்றியீட்டியுள்ளார். இவரை எதிர்த்த அனைவருமே கட்டுப்பணத்தை இழந்தனர்.

இந்திரராசா மரணவிசாரணை:

# 'கயிற்றில் தலைகீழாகக்கட்டி தொங்கவிட்டு அடித்தார்கள்'

## மதியாபரணம் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''சாவகச்சேரி பொலிஸ் நிலைய மேல்மாடியில் என்னை கயிற்றால் கட்டி தலைகீழாக தொங்கவிட்டார்கள். முதலில் ராதாவை தலைகீழாக கட்டி தொங்க விட்டனர். பின் ராதாவை இறக்கிவிட்டு அதே கயிற்றில் என்னைக் கட்டி தொங்கவிட்டு அடித்தார்கள்''

யாழ்-பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த இந்திரராசா, ரிமாண்டில் மரணமானது தொடர்பான மரணவிசாரணையில் சாட்சியமளித்த கொக்குவிலைச் சேர்ந்த 61 வயதான மதியாபரணம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் நீதவான் திரு. எஸ். இராஜசிங்கம் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவர் நலனைக் கவனிக்கும் பொருட்டு சட்டத்தரணி எஸ். நடராசா, சட்டத்தரணி பி. எப். சேவியர் ஆகியோர் ஆஜரானார்கள்! பொலிஸ் தரப்பில் ஏ. எஸ். பி. இரத்னாயக்கா, ஏ. எஸ். பி. (குற்றத் தடுப்பு பிரிவு) நிஸாக் ஆகியோர் ஆஜரானார்கள்,

மதியாபரணம் தொடர்ந்து கூறியதாவது:- ''என்னை அடித்துவிட்டு புலோலி வங்கிக் கொள்ளை சம்பந்தப்பட்டவர் நீதானா என்று கேட்டார்கள். ''அது நானில்லை வேறு ஆள்'' என்று சொன்னதும் அடித்ததை நிறுத்திவிட்டனர். என்னை வெளியில் செல்லவிடவில்லை. சாப்பாடுகூட இல்லை. பின் ஒரு தடவை அடித்தார்கள்.

ஏ. எஸ். பி.இரத்தினாயக்கா குறுக்குவிசாரணை செய்தார்.

கேள்வி: உன்னை சாவகச்சேரிக்கு ஜிப்பில் கொண்டுவந்தார்கள்.

பதில்: ஆம்.

கே. உம்முடன் லொக்கப்பில் இருந்தது யார்?

ப: சேனாதிராசா, நகுலேஸ்வரன், பாலசுப்பிரமணியம்.

கே. உம்மை வெளியில் எத்தனை மணிக்கு கொண்டு வந்தார்கள்?

ப: 9 மணிக்கு.

கே: இந்திரராசா எங்கே இருந்தார்?

ப. மேல்மாடியில்

கே. எத்தனை பொலிஸார் இருந்தார்கள்?

ப: 8 பேர்,

கே: வேறு யார் இருந்தார்கள்?

ப: இன்ஸ்பெக்டரும் இருந்தார்.

கே: சார்ஜன் கந்தசாமி இருந்தாரா?

ப: ஆம்.

கே: எப்படித் தெரியும்?

ப. அங்கு போனபின் தெரியும்,

கே: உமது வீட்டிற்குவந்த போது அவரும் வந்திருந்தாரா?

ப: இரவு நேரம் சொல்ல முடியாது.

கே: இன்ஸ்பெக்டரை மட்டும் இரவு நேரம் அடையாளம் கண்டுகொண்டீர்?...ஆம்.

கே: துவக்கு திருத்த லைசென்ஸ் எடுக்கவில்லை?

இல்லை

ப: உம்மை 2-வது தடவையும் பொலிஸார் கைதுசெய்தனர்? ஆம்.

கே: 2-ம் தடவை எதற்கு பிடித்தார்கள்?

ப: துவக்குதிருத்திக் கொடுத்ததென்று பிடித்தார்கள்.

கே: உமது வாக்கு மூலம் பதிவு செய்தார்கள்?

ப: ஆம். ரிமாண்டில் வைக்கப்பட்டேன்.

கே: இரண்டாம் தடவை பிடித்தது யார்?

ப: இன்ஸ்பெக்டர்.

கே: அந்த தடவை உமது வீட்டில் பொலிஸார் துவக்கு எடுத்தாகர்ளா?

ப: இல்லை.

கே: 2 தடவை பிடித்தற்கும் வழக்கு தாக்கல் செய்யவில்லை?

ப: ஒரு முறை தாக்கல் செய்தனர்?

கே: என்ன குற்றச்சாட்டு?

ப: கைத்துப்பாக்கி வைத்திருந்தது தொடர்பாக இன்னுமொருவருடன் சேர்த்து குற்றம் சாட்டினார்கள்.

கே: துவக்கு திருத்த லைசென்ஸ் வைத்திருக்காமல் துவக்கு திருத்தினீர்?

ப: இல்லை.

கே. துவக்கு திருத்துவதற்கு லைசென்ஸுக்கு நீர் விண்ணப்பிக்கவில்லையா அல்லது பொலிஸார் சிபார்சுசெய்யவில்லையா?

ப: நான் விண்ணப்பிக்கவில்லை.

கே: கைத்துப்பாக்கி வைத்திருந்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது?

ப: ஆம்.

கே: ஜெயேந்திரன் உம்மை வரச்சொல்லி அனுப்பினார்?

ப: ஆம்.

கே: நீர் போய் சந்தித்தீர்?

ப: ஆம்.

கே: என்ன சொன்னார்?... எனது மடியில் ராதா செத்துவிட்டார் என்றார். வேறு ஒன்றும் விபரமாக அவரால் சொல்ல முடியாமலிருந்தது.

## இன்று வரவேற்பு

[யாழ்ப்பாணம்]

சீனா, ஹொங்கொங், சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த யாழ். மேயர் திரு. இராசா விசுவநாதன் இன்று யாழ்ப்பாணம் திரும்புகிறார்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். புகையிரதநிலையம் வந்தடையும் மேயரை வண்ணை சர்ந்தையர்மடம் பிள்ளையார் கோவிலில் இருந்து மங்கல இசைமுழங்க 22-ம், 23-ம் வட்டார மக்கள், மாநகரசபை உறுப்பினர் திரு. செ.குமாரவேலு தலைமையில் வரவேற்று அவரது வீடுவரை அழைத்துச் செல்வர். நாளை நண்பகல் யாழ். மாநகரசபை மண்டபத்தில் திரு. விசுவநாதன் உரையாற்றுவார். (கு)

## மரண அறிவித்தல்
### பத்தினிப்பிள்ளை சபாரத்தினம்

ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் காலஞ்சென்ற சபாரத்தினத்தின் துணைவியாரும், குணரத்தினம், புஷ்பரத்தினம், அரியரத்தினம், (மீன்பிடி இலாகா) சுகிர்தரத்தினம், (மெதடிஸ்த பாடசாலை, பருத்தித்துறை). தேவரத்தினம் (உடுவில் வித்தியாலயம்), சொர்ணரத்தினம் (மகாவித்தியாலயம், நெலிக்குளம்), பவளரத்தினம், ராஜரத்தினம் ஆகியோரின் தாயாரும்; வீனா, நேசராஜா, நவமணி, பொன்னம்பலம் (ஹாட்லிக் கல்லூரி), தம்பித்துரை (வை. எம். சி. ஏ), தேவதாசன் (கல்மடு தபாலகம்), குலரத்தினம், புஷ்பம் (சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை) ஆகியோரின் மாமியாருமாவார், அன்னாரின் பூதவுடல் உடுவிலிலிருந்து உடுவில் சேமக்காலைக்கு நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். 4610

## மரண அறிவித்தல்
### நா. வேலுப்பிள்ளை

வட்டுக்கிழக்கு சித்தங்கேணி முன்னாள் பிரபல மரவியாபாரியும், ஜவுளி வர்த்தகரும், கணேசானந்தா ஸ்டோர்ஸ் உரிமையாளருமாகிய நாராயணர் வேலுப்பிள்ளை 8-1-80 இல் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் நல்லதங்கத்தின் அன்புக்கணவரும் கணேசானந்தா ஸ்டோர்ஸ் உரிமையாளர் சுந்தரம்பிள்ளை, தவமணி, மனோன்மணி ஆகியோரின் அன்புத்தந்தையும், மகேஸ்வரி, வடிவேலு, பாலசிங்கம் ஆகியோரின் மாமனாரும், நவரத்தினராசா (U. K.), சிவனேஸ்வரி (U. K.), சிவபாலன் (U, K.), கணேஸ்வரி, புவனேஸ்வரி சிவகணேசன், சிவகுமாரன், சிவபாலன், வரதராசா, பாக்கியலட்சுமி, நடேசபாதம், நடேசலிங்கம், குகபாலன், கனகலட்சுமி, குகநேசன், ஜெயலட்சுமி ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக யாழ்ப்பாணம் 244, ஆஸ்பத்திரி வீதி இல்லத்திலிருந்து இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் கொடுப்பவர்:
வே. சுந்தரம்பிள்ளை.
4609

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ...த்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org